இடம் இருக்கும்பட்சத்தில், தகுதிவாய்ந்த உள் மற்றும் பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர், தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க முன்வரும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண்கள் 148, 149 மற்றும் 150 ஆகியவை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

***[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள். (குறுக்கீடுகள்) விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிக்கை அளிக்கிறார்கள். அது முடியட்டும். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும், சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், உரிமைக்காகவும் தம்முடைய வாழ்க்கையை அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்துவதிலும், அவர்களது பெருமைகளை வருங்கால சந்ததியினர் அறிந்து*

பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்கள் மற்றும் மணிமண்டபங்கள் எழுப்பி மரியாதை செய்வதிலும் எனது தலைமையிலான அரசு இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்குகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

அந்த வகையில், கடந்த 4 ஆண்டுகளில் தியாகி சங்கரலிங்கனார், வீரபாண்டிய கட்டபொம்மன், பொறியியல் அற்புதமான கல்லணையைக் கட்டிய கரிகால் சோழன், தென் தமிழகத்தின் உயிர் நாடியாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுயிக் ஆகியோருக்கு மணிமண்டபங்களும், தீரன் சின்னமலை, வீரமங்கை வேலுநாச்சியார், வீரத்தாய் குயிலி ஆகியோருக்கு நினைவுச் சின்னங்களும் அமைக்கப்பட்டு என்னால் திறந்து வைக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம், மனுநீதிச்சோழன், சுவாமி சகஜானந்தா, ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோருக்கு மணிமண்டபங்கள் அமைக்கவும், தியாகி சிதம்பரநாதன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தியாகி கீழப்பழூர் சின்னசாமி ஆகியோருக்கு திருவுருவச் சிலைகள் எழுப்பவும் என்னால் ஆணையிடப்பட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நடிகர்களில் சிறப்பிடத்தைப் பெற்றவரும், “இந்து ராஜ்ஜியம்” என்ற நாடகத்தில் பேரரசர் சிவாஜியாக நடித்து தன் திறமையை வெளிப்படுத்தியதன் காரணமாக தந்தை பெரியார் அவர்களால் “சிவாஜி கணேசன்” என்று அன்புடன் அழைக்கப்பட்டவரும், தமிழ், இந்தி, தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்து புகழ் பெற்றவரும், “நடிகர் திலகம்” என்று மக்களால் போற்றப்பட்டவரும், ‘கலைமாமணி’, ‘பத்மஸ்ரீ’, ‘பத்மபூஷன்’, ‘செவாலியே’, ‘தாதா சாகேப் பால்கே விருது’ ஆகிய விருதுகளுக்குச் சொந்தக்காரரும், ‘வீரபாண்டிய கட்டபொம்மன்’, ‘கப்பலோட்டிய தமிழன்’, போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் பாத்திரங்களை ஏற்று அற்புதமாக நடித்து, அவர்களின் பங்களிப்பினை திரைப்படங்கள்மூலம், பட்டிதொட்டி எங்கும் எடுத்துச் சென்றவருமான மறைந்த திரு. சிவாஜி கணேசன்

அவர்களின் கலைச் சேவையைப் பாராட்டிடும் வகையிலும், அவரது நினைவைப் போற்றிடும் வகையிலும், தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று, நடிகர் சங்கம் சார்பாக நினைவகம் அமைக்கும் வகையில், சென்னை மாவட்டம், அடையாறு பகுதி சத்யா ஸ்டுடியோவிற்கு எதிரே உள்ள பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான 65 சென்ட் நிலத்தினை தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு வழங்கிட 26-9-2002 அன்று நான் உத்தரவிட்டேன்.

தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு நினைவகம் அமைக்க இடம் ஒதுக்கித் தரும்படி கேட்டுக்கொண்டதன் பேரில், நான் இந்த உத்தரவை வழங்கினேன். அதன் பேரில் மைலாப்பூர் வட்டாட்சியர் அவர்களால் இந்த இடம் தென்னிந்திய நடிகர் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட இடத்தின் ஊடே நீதியரசர்கள் குடியிருப்புகளுக்குச் செல்லும் சாலை அமைந்திருந்ததால், நீதியரசர்கள் குடியிருப்புக்குச் செல்ல தனியே சாலை அமைப்பதன் செலவாக 4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை தென்னிந்திய நடிகர் சங்கம் அளித்திட வேண்டுமென அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டது. தென்னிந்திய நடிகர் சங்கம் தங்களால் 2 இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்க இயலும் என தெரிவித்து அதனை 26-7-2004 அன்று வழங்கினர். எனவே, புதிய அணுகு சாலையை அமைப்பதற்கான மீதமுள்ள 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை எனது தலைமையிலான தமிழக அரசே ஏற்றுக்கொண்டது. திரு. சிவாஜி கணேசன் மணிமண்டபம் அமைப்பதற்கு வழங்கப்பட்ட நிலத்தைச் சுற்றி சுற்றுச் சுவர் ஒன்றை 13-2-2006 அன்று எனது தலைமையிலான அரசே அமைத்தது. தென்னிந்திய நடிகர் சங்கம், திரு. சிவாஜி கணேசன் மணிமண்டபத்தை தாங்களே அமைத்துவிடுவோம் என்று தெரிவித்த காரணத்தால் எனது தலைமையிலான அப்போதைய அரசு மணிமண்டபம் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை. திரு. சிவாஜி கணேசன் அவர்களின் மணிமண்டபத்தை அரசே கட்ட வேண்டும் என்று அப்போதே தென்னிந்திய நடிகர் சங்கம் கேட்டிருந்தால், அதற்கான உத்தரவையும் நான் அப்போதே வழங்கியிருப்பேன்.

திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைப்பதற்காக எனது அரசால் வழங்கப்பட்ட இடத்தில், தென்னிந்திய நடிகர் சங்கத்தால் இதுவரை நினைவகம் அமைக்கப்படவில்லை அந்த இடத்தில் தமிழக அரசே திரு. சிவாஜி

கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்திட வேண்டுமென பல்வேறு தரப்பினரும், அரசியல் கட்சியினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முற்பகல் 11-15

எனவே, திரு. சிவாஜி கணேசன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், மணிமண்டபம் அமைக்க தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள இடத்தில் மறைந்த நடிகர் திலகம் திரு. சிவாஜி கணேசன் அவர்களுக்கு தமிழக அரசு சார்பாக மணிமண்டபம் அமைக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் ஒரு முக்கியமான அறிவிப்பைப் படித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்ல வேண்டுமென்று விரும்புகிறார்கள். (குறுக்கீடு) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். இதை முடித்துவிட்டு பிறகு நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நேற்றுகூட நான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன், நீங்கள் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்லி முடித்த உடனேயே உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு அம்மா அவர்கள் முக்கியமான அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்லட்டும்.

3. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், திராவிட இயக்கத்தினுடைய தந்தை பெரியார் ஆக தமிழகத்தினுடைய முப்பெரும் தலைவருடைய அன்பைப் பெற்ற தமிழ் திரையுலகில் அவருடைய பாதிப்பு இல்லாமல் இனி ஒரு